நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
30.01.2024

### கைதிகளின் பற்களைப் பிடுங்கிய விவகாரம்

# ஐஏஎஸ் அதிகாரியின் விசாரணை அறிக்கையை மனுதாரருக்கு வழங்க உத்தரவு

**மதுரை, ஜன. 29:** விசாரணைக் கைதிகளின் பற்களை ஐபிஎஸ் அதிகாரி பல்வீர் சிங் பிடுங்கிய விவகாரத்தில், ஐஏஎஸ் அதிகாரியின் விசாரணை அறிக்கையை மனுதாரருக்கு வழங்க சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை திங்கள்கிழமை உத்தரவிட்டது.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் பகுதியைச் சேர்ந்த அருண்குமார் தாக்கல் செய்த மனு:

அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் என் மீது பொய் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதக் காவலில் வைத்து போலீஸார் கடுமையாகத் தாக்கினர். அப்போது, என்னுடைய 4 பற்கள் உடைக்கப்பட்டன. இதில் நான் மட்டுமன்றி, விசாரணைக் கைதிகள் சிலரது பற்களையும் ஐபிஎஸ் அதிகாரியான பல்வீர் சிங் பிடுங்கி துன்புறுத்தினார்.

அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் கடந்த ஆண்டு, மார்ச் 10-ஆம் தேதி கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை எனக்கு வழங்க வேண்டும். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்திய ஐஏஎஸ் அதிகாரி அமுதா, திருநெல்வேலி சார் ஆட்சியர் ஆகியோரது அறிக்கைகளை எனக்கு வழங்க உத்தரவிட வேண்டும் என அவர் கோரியிருந்தார். இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதி ஜி. இளங்கோவன் முன்



திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் முன்னிலையான தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் வீரா கதிரவன் முன்வைத்த வாதம்:

இந்த வழக்கு விவகாரம் தொடர்பாக தமிழக அரசால் நியமிக்கப்பட்ட ஐஏஎஸ் அதிகாரி அமுதா விசாரணை மேற்கொண்டார். இதுதொடர்பான அறிக்கை, கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. காவல் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்க வேண்டும் என்றார்.

இதற்கு மனுதாரர் தரப்பில் முன்னிலையான மூத்த வழக்குரைஞர் ஹென்றி முன்வைத்த வாதம்:

இந்த வழக்கு விசாரணையின் போது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஐஏஎஸ் அதிகாரி அமுதாவின் அறிக்கையை சமர்பிப்பதாக அரசுத் தரப்பில் ஏற்கெனவே உத்தரவாதம் அளிக்கப்பட்டது. எனவே, அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் வழங்க வேண்டும் என்றார்.

இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதி பிறப்பித்த உத்தரவு:

கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஐஏஎஸ் அதிகாரி அமுதாவின் அறிக்கையை மனுதாரருக்கு வழங்க வேண்டும். இந்த வழக்கில் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவு காட்சிகளை வழங்குவது தொடர்பாக உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும். வழக்கு விசாரணை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றார் நீதிபதி.